DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.26/2022**

| | | | |
|---|---|---|---|
| Name | : | பரமசிவன் | **Pw2** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day of January 2024.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை.

**1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த விபத்தில் இறந்துபோன பிரவீன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் கவனமாகத்தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், ராபின் என்பவர் தான் இருசக்கர வாகனத்தில் இருந்த சைடு ஸ்டாண்டை எடுக்காமல் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## <u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் என்னுடைய தம்பி முருகன் என்பவர் தான் புகார் அளித்தார். புகாரில் அவர் என்ன கூறியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. விபத்தில் இறந்த பிரவீனின் தகப்பனார் பெயர் யோசேப்பு ஆகும். அவர் தான் விபத்தில் இறந்தவரின் தகப்பனார் ஆவார். நான் கூறியவாறு முருகன் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றும், யோசேப்பு தான் காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்கிறார் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கையில் யோசேப்பு புகார் அளித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் ராபின் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாக கூறியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் இருசக்கர வாகனத்தின் சைடு ஸ்டாண்ட் தானாக கீழே இறங்கி கீழே விழுந்து அதன்பின்பு டெம்போ வேனின் அருகில் சென்று வலதுபுறம் விழுந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது என்றால் அது சரியல்ல. ராபின் ஓட்டி வந்த இருசக்கர வாகனமும், டெம்போ டிராவலர் வேனும் நேருக்கு நேர் மோதியது. அவ்வாறு நேருக்கு நேர் மோதவில்லை என்றும், வண்டியில் இருந்து கீழே விழுந்து வேனின் அருகில் சென்று விழுந்திருக்கிறார் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. யோசேப்பு கூறியதன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். அவர் கூறியவாறு நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர்களும், நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், விபத்து பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றும், மனுதாரர்கள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## <u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

டெம்போ டிராவலர் வேனை ஓட்டி வந்தவர் தான் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரிதான். பைக்கை ஓட்டியவர் சாலை விதிகளைக் கடைபிடித்து மெதுவாகத்தான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் டெம்போ டிராவலரை ஓட்டிய ஓட்டுநர் தான் என்றால் சரிதான். விபத்து நடக்கும் போது இறந்தவரின் தகப்பனாரான யோசேப்பு விபத்து நடந்த இடத்தில்

இல்லை என்றால் சரிதான். அவருக்கு விபத்து எவ்வாறு நடந்தது என்று நேரடியாகத் தெரியாது. அவர் முதல் தகவல் அறிக்கையில் இருசக்கர வாகனத்தின் ஸ்டாண்ட் இழுத்து சென்று விபத்து நடந்ததாகக் கூறியிருப்பது உண்மையல்ல. பைக்கில் வந்தவர்கள் எந்த தவறும் செய்யவில்லை. வேனை ஓட்டியவர் மீது தான் தவறு உள்ளது என்றால் சரிதான்.

**<u>5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3 ம் எதிர்மனுதாரர் தரப்பின் குறுக்குவிசாரணையை இந்த எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்கிறார்.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.01.03 18:05:48 +0530

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.26/2022**

| | | | |
|---|---|---|---|
| Name | : | முருகன் | **Pw3** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 03rd day of January 2024.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் 3வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த விபத்தில் இறந்துபோன பிரவீன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் கவனமாகத்தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், ராபின் என்பவர் தான் இருசக்கர வாகனத்தில் இருந்த சைடு ஸ்டாண்டை எடுக்காமல் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சாட்சியம் அளித்த பரமசிவன் என்னுடைய சகோதரர் ஆவார். என்ன காரணத்திற்காக விபத்து நடந்த இடத்தின் அருகில் நின்றுகொண்டிருந்தேன் என்று நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். இன்று இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. யோசேப்பு இன்று இந்நீதிமன்றத்தில் வாய்தா இருக்கிறது என்றும், அவர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சாட்சிப் பட்டியலில் நான் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டிருக்கிறேன். விபத்து சம்பந்தமான முதல் தகவல் அறிக்கைக்கு நான் விபரங்கள் கூறவில்லை. முதல் தகவல் அறிக்கை சம்பந்தப்பட்ட புகாரில் என்ன விபரங்கள் கூறப்பட்டிருக்கிறது என்று எனக்கு தெரியாது. டெம்போ டிராவலர் வேனில் பயணிகள் இல்லை. டெம்போ டிராவலரில் பெயர் போடப்பட்டிருந்ததா என்று நான் பார்க்கவில்லை. விபத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. குற்ற வழக்கு என்ன ஆயிற்று என்று எனக்கு தெரியாது. சத்தம் கேட்ட பின்பு தான் நான் பார்த்தேன். அதற்கு முன்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. யோசேப்பு எங்கள் ஊரைச் சேர்ந்தவர். நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், மனுதாரர்கள் வேண்டிய நபர்கள் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

டெம்போ டிராவலர் வேனை ஓட்டி வந்தவர் தான் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரிதான். பைக்கை ஓட்டியவர் சாலை விதிகளைக் கடைபிடித்து மெதுவாகத்தான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் டெம்போ டிராவலரை ஓட்டிய ஓட்டுநர் தான் என்றால் சரிதான். விபத்து நடக்கும் போது இறந்தவரின் தகப்பனாரான யோசேப்பு விபத்து நடந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். அவருக்கு விபத்து எவ்வாறு நடந்தது என்று நேரடியாகத் தெரியாது. அவர் முதல் தகவல் அறிக்கையில் இருசக்கர வாகனத்தின் ஸ்டாண்ட் இழுத்து சென்று விபத்து நடந்ததாகக் கூறியிருப்பது உண்மையல்ல. பைக்கில் வந்தவர்கள் எந்த தவறும் செய்யவில்லை. வேனை ஓட்டியவர் மீது தான் தவறு உள்ளது என்றால் சரிதான்.

**<u>5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3ம் எதிர்மனுதாரர் தரப்பின் குறுக்குவிசாரணையை இந்த எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்கிறார்.

G ANURADHA Digitally signed by G ANURADHA Date: 2024.01.03 18:05:56 +0530